| O.S.No. 410/2019 | PW1 : திரு. விஜயன் த/பெ. திரு. மாணிக்கம் | 05-03-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

1. ஏற்கனவே நான் 2000–ஆம் ஆண்டு வரை கூட்டுக்குடும்பாக இருந்தோம் என்று சொல்லியிருந்தேன் என்று சொன்னால் சரிதான். 2000–ம் ஆண்டிற்கு முன்னர் எனது பெயரில் எந்த ஆவணமும் பதிவு செய்யப்படவில்லை. 21–10–1993–ல் நான் கணேசன் என்பவரிடமிருந்து சொத்தினை கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் வாங்கியிருக்கிறேன். அந்த 21–10–1993 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் இணைய வழி நகல் – **பி.சா.ஆ.1** ஆகும். பி.சா.ஆ.1ல் கண்டுள்ள சொத்து கூட்டுக்குடும்ப சொத்து என்றால் இல்லை, நான் கிரையம் வாங்கிய சொத்து ஆகும். தாவா 2–ஆவது அயிட்ட சொத்து 1, 2 பிரதிவாதிகள் தனிமையில் கிரையம் பெற்ற சொத்து என்றால் இல்லை, ஒன்றாக வாங்கிய சொத்து ஆகும்.

2. 14.06.2018 –ல் நான் பி.சா.ஆ.1ன் படி கிரையம் வாங்கிய சொத்தினை எனது மகனுக்கு செட்டில்மென்ட் ஆவணம் எழுதி வைத்தேன் என்றால் சரிதான். அந்த செட்டில்மென்ட் ஆவணத்தின் இணைய வழி நகல் – **பி.சா.ஆ.2** ஆகும். அந்த செட்டில்மென்ட் ஆவணம் எழுதி வைத்த பிறகுதான் நான் இந்த பாகப்பிரிவினை வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் வாங்கிய சொத்தினை பொது சொத்து என்று சொல்லும் நான், நான் வாங்கிய சொத்தினை எந்த வகையில் தனிப்பட்ட சொத்து என்று சொல்கிறேன் என்றால் நான் கூட இருந்து வாங்கியதால் அவ்வாறு சொல்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள தாவாவானது பொய் என்று சொன்னால் சரியல்ல.

3. ஊர் பஞ்சாயத்தில் 1, 2 பிரதிவாதிகள் பொது கடனான ரூ.30,000/–த்தை என்னை கொடுக்க சொன்னார்கள் என்றும், அதனை நான் கொடுக்கிறேன் என்று சொல்லியிருந்தேன் என்றால் சரிதான். அவ்வாறு பஞ்சாயத்துதாரார்களின் சொல்லுக்கு எங்களுக்குள் ஏற்கனவே பாகப்பிரிவினை

ஏற்பட்டிருக்கும் என்று சொன்னால் பணம் கொடுத்தேன் அவர்கள் வேணாம் என்று சொல்லிவிட்டார்கள்.

4. 27-05-2019 தேதியன்று பிரதிவாதிகளை நான் பாகப்பிரிவினைக்கு அழைத்தேன் என்றும், அவர்கள் சாக்கு போக்கு சொல்லி காலம் கடத்தி வந்தார்கள் என்று பொய்யாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் சொத்து விவரங்களை குழப்பமாக குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்ய யார் என்னை கட்டாயப்படுத்தியது என்றால் யாரும் என்னை கட்டாயப்படுத்தவில்லை, நான்தான் தாக்கல் செய்தேன். 1, 2 பிரதிவாதிகளை அலைக்கழிக்கவேண்டும் என்ற நோக்கத்திற்காக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாவிற்கான வியாஜ்ஜியமூலம் தவறு என்றாலும், அதனால் என்னுடைய தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/- M. விக்னேஷ் பிரபு
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**